# 'நாம் சுவாசிக்கும் வளி' வளியின் தரம் தொடர்பிலான தேசிய மாநாடு

## தூய்மையான வளி செயற்றிட்டம் 2025 - 2016 மே மாதம் 5 ஆம் 6 ஆம் திகதிகளில்



http://epaper.thinakaran.lk/2016/05/06/pg26_0.jpg

# இலங்கையில் வளித்தரம் பேணல் முகாமைத்துவம்

### 1.1 அறிமுகம்

உயிர் வாழ்க்கைக்கு அத்தியாவசியமான அடிப்படை வளியாகும். வளியானது மிகவும் அதிகளவில் இருப்பதனால் நிலம் மற்றும் நீர் போன்ற வளங்களைப் போல வளியும் ஒரு வளமாகக் கொள்ளப்படுவதில்லை. இருந்த போதிலும் வளி மாசடைவானது இலங்கையில் மாத்திர மல்லாது உலக நாடுகள் அனைத்திலுமே மிகத் துரிதமாக வளர்ச்சியடைந்து வரும் ஒரு பிரச்சினையாகக் கொள்ளப்படுகின்றது. 1991 முதல் 2015 ஆம் ஆண்டு வரை இலங்கையின் வாகனப் பாவனை அதிகரிப்பானது 2015 ஆம் ஆண்டு இறுதியில் 3,660,685 ஆகவிருந்தது. இவற்றில் இரட்டை எஞ்சின் கொண்ட மோட்டார் சைக்கிள்களின் எண்ணிக்கை 45% ஆகவிருக்க, முச்சக்கர வண்டியின் யின் எண்ணிக்கை 14% ஆகவுள்ளது.

கொழும்புப் பெரும்பாகத்தில் வளிமண்டல மாசடைவானது உச்சளவில் உள்ளது. இங்கு தான் நாட்டின் பெரும்பான்மையான மக்கள் வாழ்கின்றனர். நாட்டின் அனேகமான கைத்தொழில் முயற்சிகள் இங்குதான் இடம்பெறுகின்றன. கொழும்பு பெரும்பாகப் பகுதியில் வளி மாசடைதலுக்கு போக்குவரத்துத் துறையே அதிகளவிலான பங்களிப்பினை நல்குகின்றது. அதன் அமைவிடம் காரணமாக கண்டி நகரும் (பள்ளத்தாக்கில் அமைந்துள்ளது) மிக மோசமான வளியின் தரத்தினைக் கொண்டிருக்கின்றது.



வளி மாசடைவானது நிலையான மற்றும் அசையும் மூலங்களால் ஏற்படுகின்றது. கைத்தொழிற்றுறை மற்றும் வீடுகளின் நிலையான மூலங்கள் மூலம் அதிகளவிலான மாசுக்கள் ஏற்படுகின்றன. இன்றைக்கும் விறகானது நாட்டின் 75 சதவீதமான மக்களுக்கான சமையல் எரிபொருள் மூலமாகக் காணப்படுகின்றது. ஏனைய வீட்டு எரிபொருள் மூலங்களாக திரவப் பொற்றோலிய வாயு (LPG), மின்சாரம், மற்றும் மண்ணெண்ணெய் என்பன காணப்படுகின்றன.

அனேக நகர மயமாக்கல் மற்றும் பொருளாதார நடவடிக்கைகள் மையப்படுத்தப்பட்டுள்ள கொழும்பிலேயே வளியின் தரத்தினை கண்காணிப்பதற்கான நடவடிக்கைகள் பிரதானமாக இடம்பெறுகின்றன. கண்டி, அனுராதபுரம், புத்தளம், குருநாகல், மற்றும் ஏனைய பிரதான நகரங்களில் மிகவும் மட்டுப்படுதப்பட்ட அளவிலேயே வளியின் தரத்தினைக் கண்காணிப்பதற்கான நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன. அவ்வாறான கண்காணிப்பு நடவடிக்கைகளும் ஆய்வுத் தேவைப்பாடுகளைக் கருத்திற் கொண்டே மேற்கொள்ளப்படுகின்றன.

கழிவுகளை திறந்த வெளியில் எரியூட்டுதல் மற்றும் அதனுடன் தொடர்புபட்ட நடவடிக்கைகள் உட்புற வளியின் தரத்துடன் தொடர்பு பட்டிருப்பதாக சமீபத்தைய ஆய்வுகள் தெரிவிக்கின்றன. இலங்கையில் நகர்ப்புற வளியின் தர முகாமைத்துவத்துடன் ஒப்பிடுகையில் உட்புற வளியின் தர முகாமைத்துவமானது மட்டுப்படுத்தப்பட்டதாக உள்ளது. ஈயமானது பெற்றோலில் இருந்து 2003 ஆம் ஆண்டில் நீக்கப்பட்ட போதும், பூச்சுவகைகளில் உள்ளடக்கப்பட்டிருக்கும் ஈயமானது, உட்புற வளிமாசடைதலுக்கான காரணமாக விளங்குகின்றது.

### 1.2 கைத்தொழிற்றுறை

கடந்த தசாப்தத்தில் இலங்கையில் கைத்தொழிற் றுறையானது ஒப்பீட்டளவில் கணிசமான அளவு வளர்ச்சி கண்டுள்ளது. அனேக உற்பத்தித் தொழிற்றுறைகள் கண்டி, கம்பஹா மற்றும் கொழும்பு ஆகிய மாவட்டத்திலேயே செறிந்திருக்க காணப்பட்டன. இத்துறைகளினால் ஏற்படும் வளி மாசானது, தணிக்கைகளையும், கார்பனீரொட்சைட்டு, ஒட்சைட்டுக்கள், கந்தகம் மற்றும் நைதரசன் என்பனவற்றனைக் கொண்டிருந்தது.

1980 ஆம் ஆண்டுக்கு முன்னர் நிறுவப்பட்ட அனேக கைத்தொழிற்றுறைகள், மாசடைதலைத் தடுப்பதற்கான எந்தவொரு முறையான நடவடிக்கைகளையும் கைக்கொள்ளாததோடு, மிகப் பழைய தொழில் நுட்பத்தினையும் கொண்டிருந்தன. அனேக கைத்தொழிற்றுறைகள் அவ்வாறான மாசடைதல் தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான போதிய வளங்களைக் கொண்டிராததோடு, நவீன தொழில்நுட்பத்தினையும் புகுத்த அவற்றினால் முடியவில்லை. அவ்வாறான மாசடைதலைக் கட்டுப்படுத்தும் உபகரணங்களைப் பொருத்துவதற்கான போதியளவிலான இடவசதிகளையும் அவை கொண்டிருக்க வில்லை. கைத்தொழிற்றுறைகளில் பொதுவாகப் பயன்படுத்தப்படும் எரிபொருட்களாக மின்சாரம், உலையில் இருந்து பெறப்படும் எண்ணெய், விறகு மற்றும் நிலக்கரி என்பனவே பயன்படுத்தப்படுகின்றன. காபனீரொட்சைட்டின் வெளியேற்றமானது பல்வேறுபட்ட கைத்தொழிற்றுறைச் செயற்பாடுகளினால் ஏற்படுகின்றன. உதாரணமாக சீமெந்து மற்றும் சுண்ணாம்புக்கல் உற்பத்தி, பெற்றோலிய சுத்திகரிப்பு, சக்தி உற்பத்தி, செயலூக்கப்பட்ட கார்பன் உற்பத்தி என்பனவற்றைக் குறிப்பிடலாம். அதனால் இக் கைத்தொழிற்றுறையில் மாசுக்களானவை, இரு வகைகளாகப் பிரிக்கப்படலாம்.- வெளியிடுபவை, மூலப்பொருட்களுக்கான செயற்பாடுகளை மேற்கொள்பவை, (உதாரணத்துக்கு, சீமெந்துத் துகள், ஈயத்திலிருந்து ஈயத் துணிக்கைகள், உலைகளில் இருந்தான எண்ணெய், அமிலத் தூபங்கள், அமிலம் தயாரிக்கும் இயந்திரங்களில் இருந்தான புகை ) மற்றும் சக்தி உற்பத்திச் செயற்பாடுகளில் இருந்தான வெளியேற்றங்கள்(அதாவது, உலைகளில் இருந்தான எண்ணெய், கொதிப்பான்கள்)

### 1.3 போக்குவரத்துப் பிரிவு- வாகன புகை வெளியேற்றம்

அசையும் மூலங்களில் இருந்தான கார்பன் ஓரொட்சைட்டு (CO), ஐதரோ கார்பன்கள், (HCs) மற்றும் நைதரசன் ஒட்சைட்டுக்கள், (NOx) என்பன மனித ஆரோக்கியத்தில் கணிசமான தாக்கத்தினைச் செலுத்துகின்றன. அவற்றினால் ஏற்படும் நேரடியான தாக்குத்துக்கு மேலதிகமாக, அவை இரண்டாம் நிலை மாசுக்களை உருவாக்கும் முன்னோடிகளாகவும் உள்ளன. (உதாரணத்துக்கு புகைப் பனி மற்றும் அமில மழை என்பனவற்றினை உதாரணங்களாகச் சொல்லலாம்) இவையும் பொதுச் சுகாதாரத்துக்கும், சுற்றாடலுக்கும் கேடு விளைவிக்கின்றன. கழியூதாக் கடந்த கதிர்களின் பிரசன்னத்தில், ஐதரொட்சைட்களுடன் NOx மற்றும் HCs என்பனவற்றின் இடைத்தாக்கமானது ஓசோனைத் தோற்றுவிக்கின்றது. இது ஒளி வேதியல் பனிப்புகையின் முக்கிய கூறாகவுள்ளது.

மிகத் துரிதமாக அதிகரித்தவரும் வாகனப் பாவனையும் எரிபொருள் தேவைப்பாடும் குறிப்பாக டீசல், போக்குவரத்துத் துறையில் மீள புதுப்பிக்கப்பட்ட வாகனங்களின் அதிகரிப்பு, வாகனங்களின் மிக மோசமான பராமரிப்பு, செலவினைக் கட்டுப்படுத்த தரம் குறைந்த எரிபொருட் பாவனை, என்பன இலங்கையில் வளி மாசடைதலுக்கான முக்கிய காரணகளாகவுள்ளன. இருப்பினும் ஹைபிரிட் இன வாகனங்களின் பாவனை மற்றும் மின்சாரத்தில் இயங்கும் கார்களின் பாவனை அதிகரிப்பு என்பன நகர்ப்புறங்களில் வளி மாசடைவினை ஓரளவுக்கேனும் கட்டுப்படுத்தக் கூடியதாகவுள்ளது. வீதியில் வாகனங்கள் அதிகரித்துக் காணப்பட்ட போதும் வளிமாசடைவினைக் கட்டப்படுத்தக் கூடியதாக விருந்திருக்கின்றது. இருப்பினும் கொழும்பு போன்ற பிரதான நகர்களில் வளியின் தரமானது வர்த்தமானிப் படுத்தப்பட்ட வளியின் தரத்திலும் கூடுதலான தாகவேயுள்ளது..

### 1.4 உட்புற வளி மாசடைவு

இலங்கையைப் போன்ற வளர்முக நாடுகளில், உட்புற வளிமாசடைதலானது பெருமளவில் உயிர்ச்சுவட்டு எரிபொருட்களினை எரிப்பதனாலேயே ஏற்படுகின்றது. அவ்வாறான எரிபொருட்களாக விறகு மற்றும் விவசாயக் கழிவுகளைக் குறிப்பிடலாம். பல்வேறுபட்ட கட்டடப் பொருட்கள், உயிர்வாயு எரிபொருள் மண்ணெண்ணெய் போன்ற ஏனைய சுவட்டு மூல எரிபொருட்கள் திரவ பெற்றோலிய எரிபொருள் மற்றும் டீசல் என்பன மாசடைதலுக்கான பல்வேறுபட்ட அம்சங்களை உள்ளடக்கியுள்ளன. அவையாவன நைதரசனீ ரொட்சைட்டு, காபனோ ரொட்சைட்டு, ரேடன், / போமல்டிகைட்டு, அஸ்பெஸ்டர்ஸ், பாதரசம், மனிதனால் செய்யப்பட கனிம நார்கள், ஆவியாகும் கனிம சேர்மானங்கள் மற்றும் சுகாதாரத்துக்குக் கேடு விளைவிக்கும் பக்றீரியாக்கள், எனபனவாம். வீட்டினுள்ளான வளி மாசடைதல் நிலைமையானது சமையலறையில் போதிய காற்றோட்டம் இல்லாத நிலைமைகளின் போதே தோற்றம் பெறுகின்றது.

இவற்றுக்கு மேலதிகமாக திண்மக் கழிவுகளை திறந்த வெளியில் எரியூட்டுவதும் ஓரிடத்திலும் அதனைச் சூழவுள்ள பகுதியிலும் வளி மாசடையக் காரணமாகின்றது. அவ்வாறு திண்மக் கழிவுகளை நாம் எரியூட்டும்போது அவற்றில் உள்ள பிளாஸ்திக் மற்றும் பொலித்தீன் பொருட்கள் வீட்டில் உள்ளவர்களின் உடல் நலத்துக்கும், குறிப்பாக சிறார்கள், கர்ப்பிணித் தாய்மார் பாலூட்டும் தாய்மார் ஆகியோரின் சுகாதாரத்துக்குக் கேடு விளைவிக்கின்றது. குறைந்த வெப்பநிலையில் பிளாஸ்திக்குகள் மற்றும் பொலித்தீன்களை எரியூட்டும் போது, (சாதாரணமாக வீட்டில் நாங்கள் குப்பைகளை எரியூட்டும் வெப்பநிலையானது, 200- 400 பாகை செல்சியசாக இருக்கும்) டயொக்சின் மற்றும் பேர்னேஸ்களை அவை வெளியிடுகின்றன. இவை ஸ்டொக்ஹோம் உடன்படிக்கையின் பிரகாரம் தொடர்ச்சியான சேதன மாசுக்களாக (POP) வகை பிரிக்கப்பட்டுள்ளன.

### 1.5 வாயு மாசடைதலுக்கான குறிகாட்டி

இலங்கையில் வாயு மாசடைதலுக்கான பிரதமான மூலமாக தூசு / புகைக் கரி என்பனவே காணப்படுகின்றன. மத்திய சுற்றாடல் அதிகாரசபையினால் (CEA) அடையாளம் காணப்பட்டதன் பிரகாரம், தூசு ஏற்படுவதற்கான பிரதான மூலங்களாக அசையும் மூலங்களே காணப்படுகின்றன. வருடாந்த ஏற்றுக்கொள்ளத்தக்க சுற்றுச்சூழல் அளவான கொழும்பில் PM-10 ஆக உள்ளதோடு கடந்த வருடங்களில் அது 72-82 µg/m3 என்ற மட்டத்திலேயே உள்ளதோடு, 2001 ஆம் ஆண்டில் உச்ச அளவினைக் காட்டியுள்ளது. இருப்பினும் இப் பெறுமானங்களானவை, உலக சுகாதார ஸ்தாபனத்தின் அண்மைய PM-10 க்கான 20 µg/m3 எனும் மட்டத்திலேயே உள்ளதோடு, உலக சுகாதார ஸ்தாபனத்தின் இடைக்கால -1 இலக்கான 70µg/m3 எனும் மட்டத்துடனும் மிக அரிதாகவே பொருந்துவதோடு, கொழும்பு நகரத்தில் மாசுத்துகள்களின் நிலைமைகளில் ஆரோக்கியமற்ற ஒரு நிலைமையினை விளக்குகின்றது.

இருப்பினும் 2008 ஆம் ஆண்டில் வாகன புகைப் பரிசோதனையின் அறிமுகமானது, கொழும்பில் சுற்றுச் சூழல் பேணல் மட்டமான PM-10 இனை 62-65 µg/m3 எனும் அளவினால் குறைவடையச் செய்தது. வாகனங்களின் எண்ணிக்கையானது அதிகரித்த போதும் இவ்வெண்ணிக்கையானது இவ் வரையறைகளுக்குள்ளேயே உள்ளது.



### 2. வளி மாசடைதல் கட்டுப்பாட்டில் இடையீடுகள்

வளி மாசடைதலைக் கட்டுப்படுத்துவதற்கான தேவையான சட்ட ரீதியான மற்றும் சீராக்கல் பொறிமுறைகளை வகுத்ததன் மூலம் இலங்கையானது முக்கிய கொள்கை இடையீடுகளை மேற்கொண்டுள்ளது. இதற்கென நிறுவன மயப்படுத்தப்பட்ட நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டதோடு, ஆளுமை விருத்திச் செயற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டன.

### 2.1 மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் நிர்மாணம்

இலங்கையில் சுற்றாடலைப் பாதுகாக்கும் மற்றும் மகாமைத்துவம் செய்யும் நோக்கில் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டம் (NEA) உருவாக்கப்பட்டது. இச்சட்ட ஏற்பாடுகளுக்கு அமைய மத்திய சுற்றாடல் அதிகார சபையானது, 1981 ஆம் அண்டில் உருவாக்கப்பட்டது.

1994 ஆம் அண்டு டிசம்பர் மாதத்தில், தேசிய சுற்றாடல் சட்டத்தின் கீழ் இலங்கையின் சுற்றுப்புற வளியின் தரமானது வர்த்தமானிப் படுத்தப்பட்டது. இவ்வொழுங்கு விதிகள் வாகனத்தினால் ஏற்படும் வளி மாசடைவினை ஆராயவில்லை. இருப்பினும் மத்திய சுற்றாடல் அதிகார சபையானது, 2000, 2003, 2007 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் வாகனங்களினால் ஏற்படும் வளி மாசடைவினைத் தடுக்கும் வகையில், வாகனப் பாவனை, இறக்குமதி செய்யப்படும் வாகனங்கள், எரிபொருள் தரம் என்பன தொடர்பான சீராக்கல்களை தேசிய சுற்றாடல் சட்டத்துக்கான சீராக்கல்களாக வர்த்தமானிப் படுத்தியது.

### 2.2 தூய்மையான வளி 2000 செயற்றிட்டம்

பெருநகர சுற்றாடல் திட்டத்தின் கீழ் (MEIP) கொழும்பு பெருநகரப் பகுதியில் மோசமடைந்து செல்லும் வளியின் தரத்தினை மீட்டெக்கும் வகையில் தூய வளி 2000 எனும் செயற்றிட்டமானது உருவாக்கப்பட்டது. மேற்குறித்த தூய வளி 2000 செயற்றிட்டமானது நகர வளி மாசடைதலைக் கட்டுப்படுத்தலுடன் தொடர்புடைய நிறுவனங்களின் பணியினை மாற்றி அவற்றினை கொள்கை வகுப்பு, முதல் வளித்தர கண்காணிப்பு சட்ட அமுலாக்கம், ஒழுங்கு விதிகள் கடைப் பிடிக்கப்படுவதை உறுதி செய்தல், தொழில்நுட்பம் மற்றும் வளி மாசடைதல் தொடர்பில் ஆராய்ச்சிகளை மேற்கொள்ளல் போன்ற பல்வேறு விடயங்களில் அவற்றனை ஈடுபடுத்தியது.

குறிப்பாக போக்குவரத்துத்துறைக்கு தூய்மையான எரிபொருள் கிடைப்பதனை உறுதி செய்யயும் செயற்றிட்டம் அமுல் செய்யப்பட்டது. இச் செயற்றிட்டமானது பின்வருவனவற்றினை உள்ளடக்கியிருந்தது.

- 2002 ஜுலை 01 ஆம் திகதி முதல் ஈயக் கலப்பற்ற எரிபொருள் நாடெங்கும் விநியோகிகப்பட்டது.
- 10,000 ppm கந்தக டீசல் படிப்படியாக அகற்றப்பட்டு, 2003 ஆம் ஆண்டில் 3,000 ppm கந்தக டீசல் நாடெங்கும் அறிமுகப்படுத்தப்பட்டது.

இதற்கு மேலதிகமாக, தேசிய சுற்றாடல் அதிகார சபையின் கீழ் ஜுன் 30, 2003 அன்று உள்ளடக்கப்பட்ட சீராக்கல்களும் வர்த்தமானிப் படுத்தப்பட்டன. அவ்வர்த்தமானி அறிவித்தலில் உள்ளடங்குபவை

ஏற்கனவே பாவனையில் உள்ள வாகனங்களுக்கான புகை வெளியேற்ற தர நிலைமைகள்

- பெற்றோல், டீசல் மற்றும் சுப்பர் டீசலுக்கான எரிபொருள் தரம்
- இறக்குமதி செய்யப்படும் வாகனங்களுக்கான புகை வெளியேற்ற தர நிலைமைகள்

### 2.3 வளி வள முகாமைத்துவ நிலையம் நிர்மாணம் (AirMAC)

கொழும்பிலும் நாட்டின் ஏனைய பகுதிகளிலும் வளி தர முகாமைத்துவ நிகழ்ச்சித் திட்டத்தினைச் சிறப்பாகச் செய்யும் வகையில் வளி வள முகாமைத்துவ நிலையம் (AirMAC) ஆனது 2001 ஆம் ஆண்டில் நிர்மாணிக்கப்பட்டது. அன்று முதல் AirMAC ஆனது பல்வேறு பட்டவர்களின் பங்களிப்புடன் நாட்டில் வளியின் தர மேம்படுத்துகைக்கான நிகழ்ச்சித் திட்டங்களை வகுப்பதில் முன்நின்று செயற்பட்டுள்ளது. வளி வள முகாமைத்துவ நிலையத்தின் பணியானது, வளி வளத்தினை முகாமைத்துவம் செய்வதில் தலைமைத்துவத்தினை வழங்கி மாசடைதலைக் குறைப்பதன் மூலம், பொதுமக்களின் சுகாதார ஆரோக்கியத்தினை மேம்படுத்தவதோடு சுற்றுச்சூழலையும் பேணுகின்றது. AirMAC இன் பங்குதாரர்களில் அரச நிறுவனங்கள், தனியார் துறையினர், பல்கலைக்கழகங்கள் மற்றும் ஆராய்ச்சி அமைப்புகள் என்பன உள்ளடங்கியுள்ளன.

### 2.4 வாகன புகைப் பரிசோதனைத் திட்டத்தினை அமுல் செய்தல்

கவனமான ஆராய்ச்சிகள், பங்குதாரர்களுடனான கலந்துரையாடல்கள், பல்வேறுபட்ட பங்குதாரர்களின் ஆளுமை மதிப்பீடுகள், மற்றும் பயிற்சிகள் மூலம், வாகனப்புகைப் பரிசோதனையானது தனியார் மற்றும் அரச பங்குடமை செயற்றிட்டமாக அறிமுகப்படுத்தப்பட்டது. திறந்த விலைமனுக் கோரல் செயற்பாட்டின் மூலம், இத்திட்டத்தினை செயற்படுத்த இரண்டு தனியார் நிறுவனங்கள் தேர்வுசெய்யப்பட்டன. 2005 ஆம் ஆண்டில் இந் நிறுவனங்கள் நிலையான மற்றும் நடமாடும் புகைப் பரிசோதனை நிலையங்களை நாடளாவிய ரீதியில் நிர்மாணித்தன.

2008 ஜுன் மாதத்தில், வாகன புகைப் பரிசோதனைத் திட்டமானது, மேல் மாகாணத்தில ஆரம்பிக்கப்பட்டது. இத்திட்டமானது தெற்கு, மத்திய, வட மத்திய, சப்பிரகமுவ மற்றும் ஊவா மாகாணங்களுக்கும் விஸ்தரிக்கப்பட்டு இறுதியாக 2011 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம், வட மத்திய மாகாணத்தில் அமுல் செய்யப்பட்டது. 2014 ஆம் ஆண்டளவில், வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களை உள்ளடக்கியதாக இத்திட்டமானது நாடளாவிய ரீதியில் அமுல் செய்யப்பட்டது. 2016 ஆம் ஆண்டளவில், இவ்விரு நிறுவனங்களாலும் நாடளாவிய ரீதியில் 388 வாகன புகைப்பரிசோதனை நிலையங்கள் நிறுவப்பட்டுள்ளன. இலங்கை வாகன புகைப் பரிசோதனை நம்பிக்கை நிதியம் ( SLVET) ஆனது நிறுவப்பட்டு வாகன புகைப் பரிசோதனைச் செயற்பாடுகள் அமுல்செய்யப்பட்டன. VET திட்டத்தினை தொடர்ச்சியாக கண்காணித்தல் மற்றும் கணக்காய்வு செய்தல் போன்ற பணிகள் சுற்றாடல் அமைச்சின் கீழ் AirMAC இனால் மேற்கொள்ளப்பட்டன. The AirMAC இன் கண்காணிப்புப் பணிகள் 3 வழிகளில் மேற்கொள்ளப்படுகின்றன.

#### பரிசோதனை நிலைய கண்காணிப்புப் பணிகள்

பரிசோதனை நிலைய கண்காணிப்பு பணிகள் AirMAC இனால் மத்திய சுற்றாடல் அதிகாரசபை (CEA) அதிகாரிகள் மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம் (DMT), அளவையியல் திணைக்களம், தரம் மற்றும் அலகுகள் நிர்ணயம் (MUSSD) என்பனவற்றின் அதிகாரிகளின் உதவியோடு மேற்கொள்ளப்படுகின்றது. இந்நிலையத்தின் அமைவிடம், சரியான சோதனை முறைமைகள் கைக்கொள்ளப்படல், பதிவுகள் பேணல், VET அலுவலகத்துக்கு அறிக்கைகளை வழங்குதல், நிலைய ஆளணியினரின் ஆளுமை என்பன இச் செயற்பாடுகளின் மூலம் சோதனைக் குட்படுத்தப்படுகின்றன.

#### சாலையோர புகைப் பரிசோதனைத் திட்டம்

போக்குவரத்துப் பொலிசார், மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம், (DMT) ஒருகொடவத்தை தொழில்நுட்ப பயற்சிக் கல்லூ ரியின் தொழில் நுட்பவியலாளர்கள் என்போரின் உதவியுடன், சாலையோர புகைப் பரிசோதனை திட்டமானது AirMAC அதிகாரிகளினால் மேற்கொள்ளப்படுகின்றன. சாலையோரங்களின் வாகனங்கள் வெளியிடும் புகையினளவு பரிசோதிக்கப்பட்டு இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ் வண்டிகள் கூட குறிப்பிட்ட அளவிலும் கூடுதலான புகையினை வெளியிடும் பட்சத்தில் பழுது பார்க்கும்படி அறிவுறுத்தப்படும்.

#### புகை கக்கும் வாகனங்களைக் கண்டுபிடிக்கும் திட்டம்

புகை கக்கும் வாகனங்களைக் கண்டுபிடிக்கும் திட்டமானது AirMAC அதிகாரிகளினால், மோட்டார் வாகனப் போக்குவரத்து (DMT)/VET அலுவலக அதிகாரிகளின் உதவியோடு மேற்கொள்ளப்படும்.

27ஆம் பக்கம் பார்க்க

# 'நாம் சுவாசிக்கும் வளி' வளியின் தரம் தொடர்பிலான தேசிய மாநாடு

## தூய்மையான வளி செயற்றிட்டம் 2025 - 2016 மே மாதம் 5 ஆம் 6 ஆம் திகதிகளில்



http://epaper.thinakaran.lk/2016/05/06/pg27_0.jpg

# இலங்கையில் வளித்தரம்...

*26 ஆம் பக்க தொடர்ச்சி*

இதன் மூலம் வீதியில் செல்லும் புகை கக்கும் வாகனங்களை கண்களாலேயே அவதானித்து கண்டுபிடிக்கக் கூடிய வகையில் அதிகாரிகளுக்கு பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. அவ்வாறு புகை கக்குவதாக இனம் காணப்பட்ட வாகனங்கள் புகைப்படம் பிடிக்கப்பட்டு நேரம் பதிவு செய்யப்படும். அவ்வாறு புகை கக்குவதாக இனம் காணப்பட்ட வாகனங்களின் சொந்தக் காரர்களுக்கு இது குறித்த VET அதிகாரிகளால் அறிவித்தல் விடுக்கப்பட்டு, குறிப்பிட்ட காலப் பகுதிக்குள் புகைப் பரிசோதனைக்காக அவர்களது வாகனத்தினை DMT அலுவலகங்களில் சமர்ப்பிக்கும்படி அறிவித்தல் விடுப்பர்.

### 2.6 நகர வளித்தரத்தில் VET திட்டத்தின் தாக்கம்

வாகனப் புகைப் பரிசோதனைத் திட்டமானது நகர்ப்புற வளியின் தரத்தினை தீர்மானிப்பதில் முக்கிய பங்கு வகிக்கின்றது. கொழும்பு கோட்டையில் உதாரணமாக, PM-10எனும் வளியின் தரமானது, வளித்தர முகாமைத்துவ திட்டத்தின் அமுல் செய்கைக்கு முன்னதாக 72-74 /ppm என்பதாக அமைந்திருந்தது. இருப்பினும் PM-10 பெறுமதியானது மேம்படுத்தப்பட்டு, 2008 ஜுலை மாதம் முதல், 62-64 ppm எனும் வரிசையில் உள்ளது. புகை கக்கும் வாகனங்கள் அரிதாகவே வீதியில் தென்படுகின்றன. DMT மற்றும் AirMAC என்பனவற்றினால் தொடர்ச்சியான கண்காணிப்புகள் மேற்கொள்ளப்படுவதனால், வாகனச் சொந்தக்காரர்கள், தங்களது வாகனங்களை குறித்த தரத்துடன் பேணுவதில் அக்கறை காண்பித்து வருகின்றனர்.

### 2.7 இரட்டை எஞ்சின் கொண்ட முச்சக்கர வண்டிகளுக்கான தடையும் கட்டுப்பாடும்

இரட்டை எஞ்சின் கொண்ட முச்சக்கர வண்டிகளின் சூழலியல் பாதிப்பு தொடர்பிலான பல்வேறுபட்ட ஆய்வுகள் மற்றும் மதிப்பீடுகளைத் தொடர்ந்து, இரட்டை எஞ்சின் கொண்ட முச்சக்கர வண்டிகளின் இறக்குமதிக்குத் தடை விதிப்தென அரசு 2007 ஆம் ஆண்டில் தீர்மானித்தது. இதற்கமைய 01.01.2008 முதல் இரட்டை எஞ்சின் கொண்ட முச்சக்கர வண்டிகளுக்கு தடை விதிக்கப்பட்டதோடு, அவ்வகை எஞ்சின்களுக்கான உதிரிப்பாக இறக்குமதிக்கான தடையானது 01.01.2012 முதல் அமுலுக்கு வந்தது.

### 2.8 நிலையான வெளியீட்டு தரம்

தேசிய சுற்றாடல் சட்டம் (NEA) 1988 ஆம் ஆண்டில் சீராக்கப்பட்டது. வளிமண்டலத்துக்கு மாசுக்களை வெளியிடல் உள்ளடங்கலாக சுற்றாடலுக்கு மாசுக்களை வெளியிடுவதற்கான ஏற்பாடுகளை உள்ளடக்கியதாக சீர்திருத்தப்பட்டது. இதற்கு மேலதிகமாக 1990 ஆம் ஆண்டின் தேசிய சுற்றாடல் (பாதுகாப்பு மற்றும் தரம்) சீராக்கல்கள் கழிவுகள் சுற்றாடலுக்கு விடுவிக்கப்படுவதனை தடை செய்கின்றன.

AirMAC உடன் இணைந்து மத்திய சுற்றாடல் அதிகார சபையானது, கைத்தொழிற்றுறை நிபுணர்கள், இதனுடன் தொடர்புபட்ட பங்குதாரர்களின் பங்கேற்போடு, மூல வெளியீட்டுத் தர நிலைகளை வகுக்கும் செயற்பாடுகளை முன்னெடுத்தன. இத் தரங்களானவை 2016 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் வர்த்த மானிப்படுத்தப்படும். இருப்பினும் அத்தரங்கள் வர்த்தமானிப் படுத்தப்படும் வரை மத்திய சுற்றாடல் அதிகாரசபையானது, அத் தராதரங்களுக் கமைவாக இடைக்காலத் தராதரங்களை அமுல்செய்யும்.

### 2.9 BAQ 2014 மற்றும் 8வது EST போரம், கொழும்பு, இலங்கை, நவம்பர் 2014

"BAQ 2014 மற்றும் ஆசியாவில் அரசுகளுக் கிடையிலான 8 ஆவது பிராந்திய EST /போரம் ஒருங்கிணைந்த மாநாடு" இலங்கை போக்குவரத்து மற்றும் சுற்றாடல் அமைச்சு, ஜப்பான் சுற்றாடல்துறை அமைச்சு, ஐ.நாவின் அபிவிருத்தி மத்திய நிலையம், மற்றும் க்ளீன் எயார் ஏசியா என்பனவற்றால் ஆசிய அபிவிருத்தி வங்கி, உலக வங்கி மற்றும் ஜேர்மன் சர்வதேச கூட்டுத்தாபனம் என்பனவற்றின் பங்குடமையோடு ஒழுங்கு செய்யப்பட்டது. "ஆசியாவில் வாழக்கூடிய சமூகமொன்றுக் கூடாக – சுத்தமான வளி, நிலைபேறான போக்குவரத்து என்பனவற்றுக்கான எதிர்கால காலத் தீர்வு" என்பது இம்மாநாட்டின் தொனிப்பொருளாக அமைந்தது. (www.baq2014.org)

மாசடைதலுக் கெதிரான நடவடிக்கைகளில் இம் மாநாடானது ஒரு மைல கல்லாய் அமைந்திருந்தது.. பல்வேறுபட்ட நாடுகளில் இருந்தும் 1000 க்கும் மேற்பட்டோரின் பங்கேற்புடன், இம்மாநாடானது வெற்றிகரமாய் அமைந்ததுடன், வளி மாசடைதலைக் கட்டுப்படுத்துவது தொடர்பில் மற்றுமொரு மைல்கல்லாகவும் அமைந்திருந்தது. அத்துடன் ஆசியாவெங்கனும் மக்கள் தொடர்ச்சியாக வாழக்கூடிய நகர்களுக்கான தேவையையும் மக்களுக்கான வாழ்வாதாரத்தினையும் இம் மாநாடானது வலியுறுத்தியது. BAQ 2014 இன் போது இலங்கையைச் சேர்ந்த டாக்டர் டீ.எஸ்.எம. பட்டகொட, இலங்கையில் தரமான வளிக்கான முன்முயற்சிகளுக்காக விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டார.

### 2.10 எரிபொருள் தர வரைபடம்

வாகனங்களின் எண்ணிக்கை அதிகரிக்க, அனல் மின்னிலையங்களின் எண்ணிக்கையானது அதிகரிக்கப்பட வேண்டிய தேவை ஏற்பட்டது. அத்துடன் எமது வாகனங்களுக்கான தூய்மையான எரிபொருள் பாவனையின் அவசியமும் உணரப்பட்டது. தூய்மையான எரிபொருளை வாகனங்களுக்கும் கைத்தொழிற்றுறைக்கும் வழங்கும் முகமாக அனல் மின் நிலையங்களின் தேவை அதிகரித்தது. 2012 ஆம் ஆண்டில் அமைச்சரவை அமைச்சர்கள் இதற்கான ஒரு திட்டமொன்றினைத் தயாரிக்க அமைச்சரவை உபகுழுவொன்றினை நியமித்தனர். அத்துடன் அமைச்சரவை உபகுழுவுக்கு உதவவென தொழில்நுட்பக் குழுவொன்றும் நிறுவப்பட்டது. அத் திட்டமானது கீழ் காணும் முக்கிய அம்சங்களை உள்ளடக்கியிருந்தது.

I. யூரோ தராதரங்களுக்கமைவாக வாகனங்களுக்கு சுத்தமான எரிபொருளை வழங்குவதற்கான ஏற்பாடுகள்

II. கைத்தொழில் மற்றும் எரிசக்தி ஆலைகளுக்கு சுத்தமான எரிபொருளை வழங்குவதற்கான ஏற்பாடு

III. தற்போதுள்ள எண்ணெய் சுத்திகரிப்பு நிலையங்களை அதிநவீன எண்ணெய் சுத்திகரிப்பு நிலையங்களாக மாற்றுதல்

IV. எரிபொருளை பரிசோதிக்க ஆய்வுகூட வசதிகள்

மேற்குறிப்பிட்ட திட்டத்துக்கு அமைய, 2014 ஜுலை முதல் 500 ppm கந்தக டீசலுக்குப் பதிலாக நாடெங்கிலும், 10ppm கந்தக டீசல் விநியோகிக்கப்பட்டது. தற்போதுள்ள 3000 ppm சாதாரண கந்தக டீசலுக்குப் பதிலாக 2020 ஆம் ஆண்டளவில் 350ppm கந்தக டீசலை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டவுள்ளது.






### 4. தூய்மையான வளி செயற்றிட்டம் 2025

அவசர நிலைமை சவால்களை எதிர்கொள்ளும் முகமாக பங்குதாரர்களினால் அடையாளம் காணப்பட்டு இற்றைப்படுத்தப்பட்டது தூய்மையான வளி செயற்றிட்டம். அதாவது துரித நகர மயமாக்கல், உட் கட்டமைப்பு அபிவிருத்தி, புதிய வாகனங்களும் தொழில்நுட்பமும், தூய்மையான வளி என்பன இதனுள் அடங்கும். தூய்மையான வளி 2025 செயல் திட்டமானது கடுமையான ஆலோசனை செயற்பாடுகளின் மூலம் 2014 டிசம்பரிலும், 2015 மாரச் மாதமும் நடாத்தப்பட்ட இரண்டு பயிற்சி செயலமர்வுகளின் மூலம் வடிவமைக் கப்பட்டது.

**தூய வளி 2025 செயற்றிட்டத்தின் இலக்குகளாவன:**

1. தூய வளி முன்னேற்ற மற்றும் முகாமைத்துவத் திட்டத்தில் சகல ஒருங்கிணைப்பு மற்றும் வடிவமைத்தல் போன்ற செயற்பாடுகளின் மூலம், தேசிய பல் பங்குதாரர்களுக்கான களத்தினை நிறுவுதல்
2. வளத்தினை அடயாளம் காணல், அளவிடல், கண்காணித்தல் மற்றும் தீய மாசுக்களை அடையாளம் காணல், அமுல் செய்தல் திட்டங்களின் மூலம், பங்குதாரர்களை இணைத்துச் செயற்படல்
3. வினைத்திறன் மிக்க வளி முகாமைத்துவத் திட்டத்தினை நிலைநிறுத்தல்
4. வளியின் தரத்தினை ஊக்குவிக்கும் முகமாக ஆராய்ச்சி மற்றும் ஆளுமை விருத்திச் செயற்பாடுகளை தீவிரப்படுத்துதல்
5. துணைப் பிராந்திய மற்றும் பூகோள வளித் தர முகாமைத்துவ செயற்பாடுகளுடன் இணைப்பினை ஏற்படுத்துதல்
6. வளி மாசடைதல் தொடர்பில் பொது மக்களிடையே விழிப்புணர்வினை ஏற்படுத்துதல் வளி மாசடைதலின் தாக்கம் அதனைத் தவிர்க்க எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில்...
7. முறையான மற்றும் முறைசாரா நிதியிடல் நடவடிக்கைகள் மூலம், போதிய நிதி வளத்தினை உறுதி செய்தல்

### 4.1 வளி முாமைத்துவ செயற்பாடுகளில் நிறுவன மயப்படுத்தப்பட்ட ஒருங்கிணைப்பு நடவடிக்கைகள்

வளித்தர முகாமைத்துவப் பங்காளிகளின் பங்குபற்றுதலோடு AirMAC ஆனது 2001ஆம் ஆண்டில் தூய வளி 2000 எனும் மநாநாட்டின் பிரதிபலிப்பாய் உருவாக்கப்பட்டது. இதற்கென உத்தியோக பூர்வமான கட்டமைப்பொன்று இல்லாமை AQM திட்டத்தில் அதன் வளர்ச்சிக்குத் தடையாகவுள்ளது. எனவே இவ்விடயமானது உடனடியாக அணுகப்பட வேண்டும். இதற்கென அமைச்சரவை நியமன குழுவை நியமிக்க வேண்டும். இதன் மூலம் தூய வளி 2025 செயற் திட்டத்தினை நடைமுறைப் படுத்தலாம்.

### 4.2 வளியில் புகை வெளியீட்டினைத் தடுக்க போக்குவரத்துத் துறையின் வினைத்திறன் மிக்க முகாமைத்துவ நடவடிக்கைகள்

நகர்ப்புற வளியின் தரமானது போக்குவரத்து துறையினால் ஏற்படும் மாசுக்கள் மற்றும் வெளியீடுகளுடன் நேரடியாகத் தொடர்புபட்டவை. வீதியிலும் ரயில்வே பாதையிலும் பொது போக்குவரத்துச் சேவையை மேம்படுத்துவதன் மூலம், நகர்ப்புற வீதியின் தரத்திரனை மேம்படுத்தலாம். இதன் மூலம் நகர்ப்புற வளியின் தரத்தினை அங்கீகரிக்கப்பட்ட மட்டங்களில் பேணலாம்.

கீழக்காணும் செயற்றிட்டங்கள், 2016- 2025 காலப்பகுதிக்கு அமுல் செய்யப்படவுள்ளன

- பாரிய பொதுப்போக்குவரத்து சேவை முறைமையினை அறிமுகம் செய்தல் (BRT/MRT)
- ரயில்வே போக்குவரத்து முறைமையை வினைத்திறன் மிக்கதாகவும் தரமானதாகவும் மாற்றுதல்
- புகை வெளியீட்டினை கண்காணிக்கும் முகமாக VET திட்டத்தினை பலப்படுத்துதல்
- அதற்கமைவான உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தல் உதாரணம்: மேம்பாலம், அதிவேக நெடுஞ்சாலைகள், என்பவை வாகன தரிப்பிட வசதிகளுடன்
- போக்குவரத்துத் துறையில் சந்தை அடிப்படையிலான சீராக்கல்களை அறிமுகம் செய்தல்

### 4.3 நிலையான மூலங்களில் இருந்தான புகை வெளியீட்டினைத் தடுக்க வினைத்திறன் மிக்க முகாமைத்துவ முறைமைகள் (2016-2025)

சர்வதேச தரங்களுக்கு அமைவாக, நிலையான மூலங்களினால் ஏற்படும் மாசினைக் குறைக்க ஆளுமை விருத்திச் செயற்பாடுகளை அம் மாசுக்களை கண்காணிக்கவும் அளவிடவும் பயன்படுத்தல் அவசரத் தேவையாகவுள்ளது. இது உண்மையான வளியின் தரத்துக்கும் மாசுக்களின் மூலத்துக்கும் இடையிலான இடைவெளியினை தெளிவாகக் கோடிட்டுக் காட்டும் அதற்கேற்ப கீழக்காணும் பரிந்துரைகள் அமுல் செய்யப்பட வேண்டும்

- மாசுக்களை அளவிடலிலும் கண்காணித்தலிலும் மத்திய சுற்றாடல் அதிகார சபையினதும் அதனுடன் தொடர்பு பட்ட ஏனைய நிறுவனங்களினதும் செயற்றிறனை பலப்படுத்துதல்
- மாசுக்கள் வெளியிடும் நிலையான மூலங்களின் அடிப்படைத் தரவுகளை சேகரித்து அவற்றிடையேயான வேறுபாடுகளை அலசுதல்
- பங்குதாரர்களிடையேயும், கைத்தொழிலாளர்களிடையேயும் விழிப்புணர்வும் ஆளுமை விருத்தியும்.
- சக்தி வினைத்திறன் உபகரணங்களின் கொள்கை ரீதியான இடையீடுகள், (வரி விலக்களிப்புகள் / நிதி உதவிகள்)



### 4.4 உள்ளக வளி முகாமைத்துவம் (2016-2018)

வளி தர முகாமைத்துவத்தில் உள்ளக வளி தர முகாமைத்துவமானது மிகப் பெரிய ஒரு ஆராய்ச்சிக்குரிய பரப்பாக இனம் காணப்பட்டுள்ளது. சமையலுக்கு உயிர்வாயுக்களை பயன்படுத்துவதால் பல்வேறுபட்ட சுகாதாரப் பிரச்சினைகள் வீடுகளில் எழுவது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது அது கட்டுப்படுத்தப்பட வேண்டும். அத்துடன் கட்டட வடிவமைப்பு, கட்டுமானம், பராமரிப்பு மற்றும் பாவனை என்பனவற்றில் செயற்றிட்டங்கள் பலவும் இனம் காணப்பட்டுள்ளன. அவ்வாறு தேவைப்படும் நடவடிக்கைகளாக

- உள்ளக வளியின் தரத்தினை மேம்படுத்தவும் கட்டட ஒழுங்கு விதிகளில் விதிமுறைகளை உருவாக்கவும் நடவடிக்கை எடுத்தல்
- பல்வேறுபட்ட கட்டடங்களை இனம் கண்டு, விதிமுறைகள் அமுல்செய்யப்பட வேண்டிய இடங்களை தெரிவு செய்தல்
- உள்ளக மாசடைதல் பற்றிய கற்கை நெறிகளை நடாத்துதல் அதனால் ஏற்படும் சுகாதாரப் பிரச்சினைகள் பற்றிக் கற்றல்
- உள்ளக வளி மாசடைதலைத் தடுக்க விழிப்புணர்வுத் திட்டத்தினை அமுல் செய்தல்

### 4.5 சட்ட ரீதியற்ற மற்றும் சட்டரீதியான நடைமுறைகள் பற்றிய முகாமைத்துவம் (2016-2018)

சட்ட ரீதியற்ற செய்றபாடுகளின் மூலமான செற்பாடுகளால், வளி தர முகாமைத்துவத்தில் பாதிப்பினை ஏற்படுத்தும் இவ்வாறான மாசுக்கள் பெரும்பாலாக கழிவுகளை திறந்த வெளிகளில் எரியூட்டுதல், பிளாஸ்திக் மற்றும் பொலித்தீன்களை எரியூட்டல், இவற்றினுள் இலத்தரனியல் கழிவுகளும் அடங்கும். இவற்றினைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளாவன:

- செயற்திட்டத்துக்கான வழிகாட்டல்கள் மற்றும் தராதரங்களை உருவாக்கல்
- கழிவுகளை திறந்த இடங்களில் எரிப்பதனால் ஏற்படும் விளைவுகள் பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்துதல்

### 4.6 தூய்மையான தொழில்நுட்பங்கள், எரிபொருள் மற்றும் செயற்பாடுகள் (2016-2025)

வளித்தர முகாமைத்துவத்தில் தூய்மையான எரிபொருள் மற்றும் தொழில்நுட்பங்கள் என்பவை நேரடியான பாதிப்பனை ஏற்படுத்தும் பரிந்துரை செய்யப்பட்ட செயற்பாடுகள்

- பசுமை வாகனங்களின் அறிமுகத்துடன் மற்றும் வினைத்திறன் மிக்க பொதுப் போக்குவரத்து சேவை
- வாகனப் புகை வெளியீட்டுக்கான குறித்த கால அளவுகளிலான தராதர மீளாய்வுகள்
- மின்சார வாகனங்களுக்கான சூரியசக்தியினை அறிமுகம் செய்தல்
- தற்போதுள்ள சுத்திகரிப்பு நிலையத்தினை இற்றைப்படுத்துதல்

### 4.7 வளித் தர கண்காணிப்பு (2016-2020)

இலங்கையில் விரிவான வளி தர கண்காணிப்பு முறைகளை அமுல் செய்வதற்கான அவசரத் தேவை எழுந்துள்ளது பரிந்துரைகள்

- நாடளாவிய ரீதியில் தரமான வாளி கண்காணிப்பு வலையமைப்பனை நிறுவுதல்

### 4.8 தரமான வளிக்கான அறிவு, விழிப்புணர்வு மற்றும் தகவல்கள்

அதனாலேற்படும் சமூக, சுற்றாடல் மற்றும் சுகாதார பிரச்சினைகள் குறித்த விழிப்புணர்வினை மக்கள் மத்தியில் ஏற்படுத்தல்

### 4.9 வளி முகாமைத்துவம் தொடர்பிலான பாதிப்பு மதிப்பீட்டு நடவடிக்கைகளும் ஆராய்ச்சிகளும் (2016-2020)

முகாமைத்துவத்துக்கான கொள்கை இடையீடுகள் தொடர்பிலான ஆராய்ச்சிகள் ஊக்குவிக்கப்பட வேண்டும்.

### 5.0 கண்காணிப்பும் மீளாய்வும்

சுற்றாடல் மற்றும் இயற்கை வள அமைச்சினால் நியமிக்கப்பட்ட செயற்குழுவின் வழிகாட்டல்களின் படி, இதனை அமுல் செய்வதற்கு ஒட்டுமொத்த பொறுப்பும் AirMAC இலேயே தங்கியுள்ளது.

அதேவேளை குறிப்பிட்ட செயற்றிட்டங்களை அமுல் செய்வதற்காக வெவ்வேறான நிறுவனங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன. இவையெல்லாவற்றையும் ஒருங்கிணைக்கும் பணியினை AirMAC செய்கின்றது.

இதற்கான தலைமைத்துவம் மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சினால் வழங்கப்படுகின்றது.

**அநுர ஜயதிலக்க**
**பணிப்பாளர், வளிவள முகாமைத்துவ நிலையம்,**
**மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு**

Coordinated by
Thilak K Illeperuma

**அனுசரணை**

UNEP
United Nations Environment Programme

SACEP
South Asia Co-operative Environment Programme (SACEP)

CleanAirSL
PARTNERSHIP FOR CLEAN AIR
Clean Air Sri Lanka

SUSTAINABLE BIOMASS ENERGY PROJECT
Sustainable Biomass Energy Project

The GEF Small Grants Programme
The GEF Small Grant Programme

drivegreen
Cleanco Lanka Pvt Ltd

LAUGFS eco emission testing
Laugfs Eco Sri (Pvt) Ltd

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிட்ட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி.ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2016ம் ஆண்டு மே மாதம் 6ம் திகதி வெள்ளிக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.